# 5 ஜனநாயக சமூகமொன்றில் முரண்பாடுகளுக்கு தீர்வு காணல்

ஆதிகாலந்தொட்டு இன்று வரை மனித சமூகம் தொடரான மோதல்களுக்கூடாகவே வளர்ச்சியடைந்துள்ளது. அன்று நடந்ததைவிட இன்று மோதல்கள் அதிகமாகியுள்ளதால் அவை சிக்கலடைந்து அழிவை நோக்கியதாகயுள்ளது.

## 5.1 மோதல் என்றால் என்ன?

மானிட சமூகத்தில் வேறுபட்ட பலர் வசிக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் உடலமைப்பில், அளவில், நுண்ணறிவில், நிறத்தில் சமூக அந்தஸ்தில் பேசும் மொழியில் வேறுபட்டவர்கள். இது இயல்பாகவே மனிதனிடம் காணப்படும் தன்மையாகும். இந்நிலைமை பல்வேறு முரண்பாடுகளுக்கும் மோதல்களுக்கும் காரணமாக அமைகின்றது. ஒரு விடயம் அல்லது சம்பவம் தொடர்பாக ஒவ்வொருவரும் வெவ்வேறு கருத்தைக் கொண்டிருப்பர். இப்பல்வகைமை மோதல்களுக்கு காரணமாகலாம்.



இவ்வாறு பல கருத்துக்களை இது பற்றிக் கூறலாம். இவ்வாறு ஒரு விடயம் தொடர்பாக வெவ்வேறு கருத்தைக் கொள்ளும் மனித இயல்பை அங்கீகரிக்காமை, முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும். மனிதர்களிடையே ஏற்படும் சிறிய முரண்பாடு இறுதியில் பாரிய மோதலாக வெடிப்பதுமுண்டு.

**செயற்பாடு 5.1** ஆசிரியர் கவனத்திற்கு

வகுப்பு மாணவர்களிடம் ஒரு சிறு தாள் துண்டைக் கொடுத்து அதில் தாங்கள் செல்ல விருப்பமான இடத்தைக் குறிப்பிடுமாறு கூறுங்கள். தமது பெயரையும் எழுதும்படி கூறவும். கைகளைக் கழுத்தில் போட்ட வண்ணம் வட்டமாக இருந்து தாம்குறிப்பிட்ட இடத்துக்குப் போகும்படி வழிப்படுத்தவும். அதனால் ஏற்படும் மோதலை அவதானித்து, பின்னர் குறிப்பிட்ட இடத்துக்குச் செல்ல இடமளிக்கவும்.


ஒவ்வொருவரிடமும் பல்வேறு நோக்கங்களும் கருத்துகளும் இருக்குமென்றும் அனைவரது நோக்கங்களையும் ஏற்றுக்கொள்ள ஜனநாயக முறைப்படி ஒத்துழைப்புடன் கலந்துரையாடி தீர்மானத்திற்கு வருவதற்கான வாய்ப்பு பற்றியும் விளங்க வைக்கலாம்.

ஒன்றுக்கொன்று முரணான கருத்துள்ள இருவர் அல்லது பலர் வாய்மொழியாக அல்லது உடல் ரீதியாக அல்லது ஆயுதங்களால் மேற்கொள்ளும் கிளர்ச்சி மோதலாகும்.

மோதல்கள் தொடர்பாக பல்வேறு வரைவிலக்கணங்களை அறிஞர்கள் முன்வைத்துள்ளனர். "மோதல் என்பது ஒருவரின் இதயத்தின் அல்லது மனதின் வெளிப்பாடாகும், என்று புத்த பெருமான் கூறியுள்ளார். "மோதல் என்பது இருசாரார் அல்லது பல கட்சியினர் ஒரே நேரத்தில், அரிதாகவுள்ள ஒரே வளத்தை தனதாக்கிக் கொள்ள முயல்வதால் ஏற்படும் நிலையாகும் என்று பீற்றர் வொலஸ்டீன் கூறியுள்ளார்.

இங்கு அவர் வளம் எனக் குறிப்பிட்டது நிலம், இயற்கை வளங்கள், அரசியலதிகாரம்,உயர் அந்தஸ்து, அல்லது பெறுமானங்களாகும். பாடசாலையில் மாணவர்களிடையே ஒரு அழிதுண்டுக்காக பென்சிலுக்காக, பந்துக்காக, கதிரை, மேசைகளுக்காக இத்தகைய மோதல்கள் ஏற்படலாம். அவற்றை ஜனநாயக ரீதியாக நிவிர்த்தி செய்யாவிட்டால் பாரிய மோதல்களாக விருத்தியடையலாம். காரணம் இதில் சம்பந்தப்பட்டவர்களது சகோதர சகோதரிக்கும் பெற்றோர்களும் இதில் தொடர்பு கொண்டு பாடசாலைக்கு வெளியேயும் இம்மோதல்கள் பரவ இடமுண்டு

**கல்டுங்கின் மோதல் முக்கோணம்**



- அழிவு ரீதியான மனப்பாங்கு
- நடத்தை முறை
- அளவு கடந்த இலக்கு

கல்டுங் சுட்டிக்காட்டுவதன்படி இங்குகாணப்படும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மோதல் ஏற்பட இடமுண்டு.

**செயற்பாடு 5.2**

- பாடசாலை மாணவர்களிடையே ஏற்படும் பலவேறு மோதல்களை அவற்றின் தன்மைக்கேற்ப வரிசைப்படுத்துக

### 5.1.1 மோதற் சந்தர்ப்பங்கள்

சில அறிஞர்கள் மோதலை ஒரு வட்டமாக காட்டியுள்ளனர். வேறுசிலர் அது கூடிக் குறையும் ஒரு செயலொழுங்கு என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆயினும் மோதல் என்பது நிச்சயித்துக் கூறக்கூடிய ஒரு ஏறு வரிசைச் செயலொழுங்கன்று. அது ஒரு சந்தர்ப்பத்தில் தணிந்து மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் மேலோங்கி வருவதையுங் காணலாம். மோதல் சந்தர்ப்பங்களின் படிமுறையை பின்வருமாறு காட்டலாம்.

*1. தெளிவின்மைக் கட்டம்*

தான் மிக உயர்ந்தவன், மிகச் சரியானவன் என்று இருசாராரும் நினைத்தல். ஒருவரது செய்கை பற்றிய விளக்கம் மற்றொருவருக்கு இல்லை. ஒன்றாக இருந்து கலந்துரையாடி தீர்த்துக் கொள்ளமுடியும்.

*2. பிரிதற் கட்டம்*

விளக்கமின்மையை அடிப்படையாகக் கொண்டு கடுமையான விலகலை ஏற்படுத்திக்கொண்டு இனி எப்போதும் ஒன்று சேர முடியாது என்று நினைத்தல்.

*3. பரஸ்பரக் கவலை வெளிப்படும் கட்டம்*

இங்கு தத்தமது ஆற்றல்களை திறமைகளை புள்ளி விபரரீதியிலும் நன்மை தீமைகளை எண்ணிக்கை ரீதியில் வெளியிடுவர். நடுநியையாளர் ஒருவர் மூலம் அனுகூலம் பிரதியனுகூலங்களை கவனித்து தீர்வை முன்வைக்கலாம். பிரதிநிதித்துவம் குறைவாக உள்ள பிரிவுக்கு அதிக பிரதிநிதித்துவத்தை வழங்க முடியும்.

*4. வலிமை பெறுங்கட்டம்*

பாதிப்புக்குள்ளான பிரிவினர் பிரிந்து கோஷ்டி சேருவர். ஒவ்வொரு பிரிவினரும் வலிமையடைய முனைவர். இது உடனடியாக வன்முறைக்கு இட்டுச் செல்லாவிட்டாலும் பிரச்சினை நீடிப்பதன் மூலம் வன்முறை தோன்ற இடமுண்டு.

*5. வன்முறை, மோதல் சந்தர்ப்பம்*

இக்கட்டத்தில் எதிர் குழுவினரை அழிப்பதன்மூலம் மட்டுமே தாம் நிலைக்க முடியும் என்று


சிந்திப்பர். இதனால் திட்டமிட்ட தாக்குதல்களில் ஈடுபடுவர். ஒருவரையொருவர் விரட்டியடித்து தமது அதிகாரத்தை நிலை நாட்டுவர். ஒருபோதும் பேச்சு வார்த்தை சரிவராது என்று கூறி தமது வெற்றிக்காக செயல்படுவர். அல்லது பாதுகாத்துக்கொள்ள முற்படுவர்.

**செயற்பாடு 5.3**

பாடசாலையில் ஏற்பட்ட ஒரு மோதலின் பல்வேறு கட்டங்களைப் படி முறைப்படுத்துக. அத்தகைய கட்டங்களைத் தாண்டிச் சென்றமைக்கான காரணங்களை ஆராய்ந்து மோதலை தவிர்க்க முடியாது போனது ஏன் என்பதை விளக்குக.

## 5.2 மோதல் வகைகளும் மோதலுக்கான ஆரம்பமும்

மோதல் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் சிறிய அளவிலிருந்து பாரிய மோதல்கள் வரை அவற்றை தரம் பிரித்துக் காட்டியுள்ளனர்.




உலகில் ஏற்படும் பல்வேறு விதமான மோதல்களும் அவற்றிற்கான காரணங்களும் இங்கு காட்டப்பட்டன. ஆயினும் இதனை விட வேறுபட்ட கோணங்களிலும் மோதல்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி பின்வரும் மோதல்களையும் இனங் கண்டு கொள்ளமுடியும்.

### i அரசியல் மோதல்கள்

அரசியற் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அல்லது நாட்டில் பிரிவினை கோருவதனால் மோதல்கள் ஏற்படலாம். முதலாளித்துவ சோசலிசக் கோட்பாடுகளை பின்பற்றிய அமெரிக்காவிற்கும், சோவியத் ஒன்றியத்துக்குமிடையே ஏற்பட்ட மோதல்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும். இந்தோனேஷியாவின் கிழக்கு திமோர் போராட்டம் பிரிவினை நோக்கிலான மோதலுக்கு உதாரணமாகும்.

**ii சமய மோதல்**

வரலாற்றில் ஏற்பட்ட சிலுவையுத்தம் முதல் இன்றுவரை இதற்கான அநேக உதாரணங்களுண்டு. இந்தியாவில் இந்துக்கள், முஸ்லீக்களுக்குமிடையிலான மோதல் அதனுடன் அயோத்தியா பாபரி மஸ்ஜித் உடைப்பு போன்ற நிகழ்வுகளை அதற்கு உதாரணமாகக் கூறலாம்.

**iii எல்லை மோதல்**

நாடுகளின் எல்லைப் பிரச்சினை தொடர்பாக ஏற்படும் மோதல்களுமுண்டு. இஸ்ரவேல் பாலஸ்தீன போர் இதற்கான சிறந்த உதாரணமாகும்.

**iv நிறவேறுபாட்டு மோதல்**

வெள்ளைக் கிறிஸ்தவர்கள் கறுப்பு இனத்தவர்களைத் தாழ்த்தி நோக்குவதால் ஏற்படும் மோதல்கள். தென் ஆபிரிக்காவில் நீண்ட காலமாக ஏற்பட்ட மோதல்கள் இதற்கு உதாரணமாகும். வட அமெரிக்காவிலும் இதுபோன்ற மோதல்கள் இடம்பெறுகின்றன.

**v பொருளாதார வளங்களுக்கான மோதல்கள்**

பெற்றோலிய வளங்களை உரித்தாக்கிக் கொள்வதற்கான மோதல்களைக் கூறலாம். அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்தமை எண்ணெய் வளங்களை பெறுவதற்கான போராட்டமாகவே கருதப்படுகின்றது. இத்தகைய மோதல்கள் நாடுகளைக் கைப்பற்றுவது வரை விரிவடைய முடியும்.

**vi சாதி, கோத்திர மோதல்**

ஆபிரிக்கநாடுகளில் காணப்படும் கோத்திர சண்டைகளை இதற்கு உதாரணமாக கூறலாம். ரூவண்டாவில் டுஸ்க்கி கோத்திரத்தவர்கள் ஏனைய கோத்திரத்தார்களை தாக்குவது; தாய்லாந்தில் வடக்கு மேற்குப் புறங்களில் வாழும் கோத்திரங்களின் மோதல்களும் இந்தியாவில் உயர் குலத்தவர்களுக்கும் தாழ்தப்பட்டவர்களுக்குமிடையே ஏற்படும் மோதல்களும் இந்த வகையில் வரும் மோதல்களாகும்.

**செயற்பாடு 5.4**

| மோதல் வகை | உதாரணம் | காரணங்கள் |
|---|---|---|
| | | |

நீங்கள் இனங்கண்ட மோதல் வகைகளின்படி மேலே அட்டவணையை நிரப்பவும் மோதல்கள் ஏற்படுவதற்கான காரணங்களையும் பரிசீலிக்கும் போது

1. மக்களின் அறியாமை

2 சீரான சமூகமயமாக்கம் இன்மை

3. புத்தி சாதுரியமின்மை

4. இயற்கையான ஆக்கிரமிப்புச் சுபாவம்

5. சுயநலம்

6. உணர்வுகளுக்குக் கட்டுப்பட்டு மாற்று வழிகளை தேடாது தீர்மானங்களுக்கு வருதல் போன்ற காரணங்களினால் சிறிய அளவு மோதல்கள் உலகயுத்தம் வரையிலான மோதல்களை ஏற்படுத்துகின்றன.

**செயற்பாடு 5.5**

- மோதல்கள் ஏற்படுவதற்கான காரணங்களை விபரிக்குக
- மோதல்களின் மூலம்; உயிரியல் ரீதியான இயல்பான ஆக்கிரமிப்புச் சுபாவமாகும். ஆம், இல்லை, என்ற ரீதியில் ஒரு விவாதத்தை ஏற்பாடு செய்யவும்.

### 5.2.1 ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு மோதல்களினால் ஏற்படும் பாதிப்புகள்

பண்டை தொட்டு இன்றுவரை உலகில் ஏற்பட்ட மோதல்களினால் ஏற்படுகின்ற உயிர் மற்றும் பொருள் அழிவுகள் சொல்லும் தரமன்று. நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியுடன் மோதல்களினால் ஏற்படும் அழிவு அதிகரித்துள்ளது. அத்தகைய அழிவுகளை பின்வரும் விதத்தில் எடுத்துக் காட்டலாம்.

1. உயிர் உடைமை இழப்பு
2. சுற்றாடல் இயற்கை வளங்களின் அழிவு
3. அங்கவீனம், யுத்த பீதி காரணமாக ஏற்பட்ட உளக்கோளாறு

## 5.3 மோதல் தவிர்ப்பு முறைகள்

சமூகத் தொடர்புகளில் ஏற்படும் கருத்து வேற்றுமைகள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாமையினால் மக்கள் வன்முறைகளின் பால் ஈர்க்கப்படுகின்றனர்.

பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமையால் ஏற்படும் மனமுறிவு இதற்கான காரணமாகும். நாகரீகமான முறையில் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாதபோது ஆரம்ப மனநிலைக்குச் சென்று அவற்றைத் தீர்த்துக்கொள்ள முனைகின்றனர். மோதலின்பால் இட்டுச்செல்லும் மனிதனின் இவ்வியல்பூக்கங்களை நீக்குவதற்கு கல்வியின் மூலம் மோதல் தவிர்ப்பு மனப்பாங்குகள், திறன்கள், விருத்தி செய்யப்படவேண்டும்.

முரண்பாடுகளை அல்லது மோதல்களை தீர்ப்பதற்கு ஒருவரிடத்தில் நான்கு திறன்கள் இருக்கவேண்டும். அத்தகைய திறன்கள் இன்றி பிரச்சினைகளைத் தீர்க்க முயலும்போது சீரான பெறுபேறுகள் கிடைக்காது போகும். அத்திறன்களாவன.

1. மோதல் பகுப்பாய்வு - மோதல் இயல்பு, என்றும் அவற்றில் செல்வாக்குச் செலுத்தும் காரணங்கள் மனித தேவைகள், பீதிகள், என்றும் பகுப்பாய்வு செய்தல்.

2. மாற்றுக்கருத்து - தனது கருத்து மட்டுமன்றி வேறு தீர்ப்புகளும் இருக்கும் என்பதை ஏற்றுக்கொள்ளல்

3. பேச்சுவார்த்தை - மோதலுக்குரிய பிரிவினார்களுடன் ஒத்துழைப்புடன் கூடிய கருத்துப் பரிமாறும் ஆற்றல்.

4. நடுநிலைப்படுத்தல் - நடுநிலையாளராக நின்று இறுதி தீர்ப்புக்கு வர உதவுதல்

இப்போது நடந்து கொண்டிருக்கும் ஒரு மோதல் அல்லது எதிர்காலத்தில் நடை பெறலாம் என்று நம்பும் ஒரு மோதலின் முன்அறிகுறிகளை இனங்கண்டு அவை நிகழ்வதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல். முரண்பாடு தீர்த்தல். மோதல் தவிர்ப்பு என்பதில் அடங்கியுள்ள சில விடயங்கள் வருமாறு:

> "மோதல் தவிர்ப்பு என்பது மோதலுக் குட்பட்ட பிரிவினர்களிடையே புதிதாக இறுதித் தொடர்பை கட்டி யெழுப்பல்.
> ◆ **சைமன் பிஷர் குழுவினர்**

- மோதலுடன் தொடர்பான முன்காரணிகளை முளையிலேயே கிள்ளியெறிய நடவடிக்கை எடுத்தல்
- மோதலுக்குட்பட்டுள்ள பிரிவினர்களிடையே புதிய தொடர்புகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்
- அவர்களிடையே நேர் மனப்பாங்கை ஏற்படுத்தல்
- வன்முறை விருத்தியடைவதற்கான வாய்ப்புகளைத் தடுத்தல்


மோதல் தவிர்த்தலில் முற்காலத்திலிருந்தே பல முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மோதலுக்குட்பட்டவர்களிடம் தீர்வை பலவந்தமாக திணித்தல் அதில் ஒரு முறையாகும். தீர்வை

கட்டாயப்படுத்தி ஏற்கச் செய்வது உண்மையான மோதல் தவிர்ப்பாக அமையாது. உண்மையான மோதல் தவிர்ப்பு என்பது ஆக்கரீதியாகவும் அகிம்சை ரீதியிலும் பிரச்சினைகளைத் தீர்த்து மோதலுடன் தொடர்பான அனைத்துப் பிரிவினர்களதும் தனித்துவம் தொடர்பான மதிப்பீடுகளை இனங்கண்டு அவர்களின் மானுட தேவைகளுக்கும் ஆசைகளுக்குமான பரிகாரத்தை முன்வைப்பதாகும். மோதலில் இருந்து விலகிச் செல்வதும் தீர்வாக அமையாது. ஏனெனில் அதன்மூலம் மோதலுக்கு காரணமாய் அமைந்த மூலக்காரணிகள் மீண்டும் தலைதூக்க முடியும் என்பதாகும். முரண்பாடு தீர்த்தலில் பின்பற்றக்கூடிய வெற்றிகரமான முறையாதெனில் ஜனநாயக ரீதியில் அதற்கு முகங் கொடுப்பதாகும். அதன் மூலம் சம்பந்தப்பட்ட பிரிவினர் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முடிவை நோக்கிச் செல்ல வாய்ப்புக் கிடைக்கும். நேரடி கலந்துரையாடல் மூலம் மோதல்களுக்குத் தீர்வு காணும் பிரவேசத்தை பின்வருமாறு காட்டலாம்.

**செயற்பாடு 5.7**

1. மோதல் தவிர்ப்பு, வரைவிலக்களப்படுத்துக
2. மோதல் தவிர்ப்பின் போது ஒருவரிடம் இருக்கவேண்டிய அடிப்படை பண்புகளைக் குறிப்பிடுக


### 5.3.1. மோதல் தவிர்ப்புக்கான பிரவேசம்



இதன்மூலம் தனிநபர்களுகிடையில் ஏற்படும் சிறிய மோதல் முதல் பாரிய அளவிலான உலக யுத்தம் வரையிலான மோதல்களுக்குத் தீர்வு காணும் வழி கிடைக்கும். மோதலுக்குட்பட்டுள்ள சகல பிரிவினர்களும் பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வழிகாட்டவேண்டும். அதற்காக சகல பிரிவினரும்

1 மற்றவர் கருத்துக்களைப் பொறுமையுடன் கேட்டல்
2. அவர்களின் கருத்துக்களில் உள்ள பெறுமானங்களை விளங்கிக் கொள்ளல்
3. தமது கருத்தில் மட்டும் பிடிவாதமாக இருக்காது தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளல்
4. ஒத்துழைப்புடன் புதிய பொதுக்கருத்தை உருவாக்குதல்

விருப்பமுள்ள உணர்வு பூர்வமுள்ள உள்ளத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும். மோதல் தீர்வுச் செயலொழுங்கை பின்வரும் அட்டவணைமூலம் விளங்கிக் கொள்ளலாம்




இங்கு XY ஆகிய இரண்டு குழுக்கள் மோதலில் ஈடுபட்டுள்ளன. முதலில் இரு குழுக்களும் திறந்த மனதுடன் சுமுகமாக கருத்துப் பரிமாறிக்கொள்ளவேண்டும். இரண்டாவது கட்டமாக மோதலுக்கு ஏதுவான காரணங்களை இனங்கண்டு கொள்ளவேண்டும். இரு சாராரும் முன்வைக்கும் காரணங்களை தமது கருத்திலேயே பிடிவாதமாக இருக்காது நெகிழ்ச்சித் தன்மையை வெளிப்படுத்தவேண்டும். அதன் மூலம் புதிய மாற்றுக் கருத்துக்கள் உருவாகும். இரு சாராரும் நெகிழ்ந்து கொடுத்து அர்ப்பணிப்புகள் செய்ய இணங்குவதன் மூலமே இவ்வாறு ஏற்படும். அடுத்து புதிய மாற்றுக் கருத்தில் ஒன்றை இரு சாராரும் ஏற்றுக்கொள்வதன் மூலம் தீர்வுக்கு வழி பிறக்கும். இங்கு ஒரு நடுநிலையாளரின் சேவை பெறப்படவில்லை.

உயிர், பொருட் சேதங்கள் ஏற்பட்டுள்ள நீண்ட கால மோதலை மத்தியஸ்தர் ஒருவரின் துணையின்றி தீர்ப்பது கடினம். இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினையை

எடுத்துக்கொண்டால் மோதலில் ஈடுபட்டுள்ள இரு பிரிவினருமே தமது கருத்தில் பிடிவாதமாக இருப்பதாகத் தெரிகிறது. தெற்கின் சிங்கள மக்கள் ஒற்றையாட்சி என்ற நிலைப்பாட்டிலும் வடக்கில் ஆயுதம் தாங்கிய தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு (LTTE) தனிநாடு என்ற நிலைப்பாட்டிலும் பிடிவாதமாக இருக்கும் வரை இம்மோதலை தீர்க்க முடியாதிருக்கும்.

மோதல் முகாமைத்துவம் என்பது மோதல் இணக்கப்பாடு, மோதல் தவிர்ப்பு என்பவற்றிலிருந்து, வேறுபட்ட ஓர் அணுகுமுறையாகும். உண்மையில் மோதல் தவிர்ப்பு என்பது கூட்டான ஒரு உடன்பாட்டின்மூலம் சம்பந்தப்பட்ட பிரிவினரின் விருப்பங்களும் தேவைகளும் நிறைவேற்றிக் கொள்ளப்படுவதாகும். அது ஒரு போதும் ஒரு பிரிவின்மீது தீர்வைக் கட்டாயப்படுத்தி திணிப்பதாக அமையாது. மோதல் முகாமைத்துவம் என்பது நீண்ட காலத் தீர்வொன்றை வழங்குவதன்று. மோதலுக்குட்பட்ட பிரிவினரின் ஆசைகள், எதிர்பார்ப்புக்களை உடன்பாடாக கையாள்வதாகும். இங்கு கூட்டு செயற்பாடுகளினூடாக இரு பிரிவினரையும் ஒன்றாகச் சந்திக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான உதாரணத்தை இலங்கையின் சமாதான செயற்பாடுகளிலிருந்து காட்டலாம்

2001ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் விடுதலைப்புலிகளின் அமைப்பும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மோதல் முகாமைத்துவத்துக்கான சிறந்த உதாரணமாகும். இதன்மூலம் தமது ஆசைகளையும் எதிர்பார்ப்புக்களையும் சாத்தியமான உச்ச அளவில் உடன்பாடாகவும் ஆக்கரீதியாகவும் கையாள முயற்சி எடுக்கப்பட்டது. அது நீண்டகால தீர்வொன்றல்ல என்றும் இப்போது தெரியவந்துள்ளது.

மோதல் தீர்வு என்பது சிரமமானதும் சிக்கலானதுமான ஒரு செயலாகும். உலகின் அநேகமான மோதல் தீர்வு செயலொழுங்குகள் (குறிப்பாக இனப்பிரச்சினைகள்) தோல்வியடைந்து பின்னர் அது முன்பிருந்ததைவிடவும் தீவிரமடைந்து பாரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளதைக் காணலாம். இதற்கான சிறந்த உதாரணம் 1987இல் ஏற்படுத்தப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தமாகும். இந்தியாவினதும் அமெரிக்காவினதும் நெருக்குதலின் பேரில் விடுதலைப் புலிகள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட ஒரு தீர்வாகவும் அது காணப்படுகிறது. அப்போது அதனை ஐக்கிய தேசிய கட்சியும் சில இடதுசாரக் கட்சிகளுமே ஏற்றுக்கொண்டன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மக்கள் விடுதலை முன்னணி (JVP)யும் அதனை எதிர்த்து நின்றன. இந்நிலையில் மோதலின் பிரதான ஒரு கட்சியினரான விடுதலைப்புலிகள் அமைப்பு (LTTE) படிப்படியாக இந்திய இலங்கை ஒப்பந்தத்திலிருந்து விலகியதை தொடர்ந்து மோதல் மேலும் தீவிரமடையத் தொடங்கியது. இன்று இனப்பிரச்சினை பாரிய உயிர் அழிவுக்கும் சொத்து அழிவுக்கும் காரணமாய் அமைந்து நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை தாமதப்படுத்தி மக்கள் வாழ்க்கையில் பாரிய தடைகளை ஏற்படுத்தும் ஒன்றாக மாறியுள்ளது. அதனைத் தீர்ப்பதற்கு மூன்றாமவரின் சேவை இன்றியமையாதது என்ற நிலைக்கு வந்துள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வில் ஒரு மத்தியஸ்தர் அல்லது நடுநிலையாளர்களாக நோர்வே அரசு ஈடுபட்டுள்ளது. ஒரு மத்தியஸ்தரிடம் இருக்கவேண்டிய சில பண்புகள் பின்வருமாறு:

1. பொறுமையாக செவிமடுப்பவராக இருத்தல்
2. நம்பிக்கையாளராக இருத்தல்
3. இணக்கப்பாட்டில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றல்
4 நேர்மையான நோக்குடன் இணக்கப்பாட்டுக்கு மத்தியஸ்தம் வகித்தல்

5. நடுநிலையாளராக அனுபவம் பெற்றிருத்தல்
6. பிரச்சினை தீர்ப்பதில் உதவுபவராக இருத்தல்

ஒரு மத்தியஸ்தர் அல்லது நடுநிலை வகிப்பவர் ஒருபோதும் தீர்வு வழங்குபவராகவோ அதிகாரப் பிரயோகம் செய்பவராகவோ இருக்க மாட்டார். அவர் தர்க்கரீதியாக விளங்கக் கூடியவராகவும் விளங்க வைத்து பிரச்சினையைத் தீர்க்க உதவுபவராகவும் இருப்பார்.

**செயற்பாடு 5.8**

- வகுப்பில் இரண்டு குழுக்களிடையிலான பிரச்சினையை ஒரு மத்தியஸ்தர் ஊடாக தீர்க்கும் விதத்தை வகிபாகமேற்று செய்துகாட்ட வழிப்படுத்துக

## 5.4 மோதல் தவிர்ப்பும் சமாதானமாகத் தீர்ப்பதன் அனுகூலங்களும்

மனிதன் இயல்பாகவே ஆக்கிரமிப்புச் சுபாவம் கொண்டவன் என்ற கருத்து உயிரியல் ரீதியாக உருவாக்கப்பட்டுள்ளது. அதனால் ஒரு மோதலில் இருந்து தந்திரோபாயமாத் தவிர்த்து கொள்வது மானிட நடத்தை விருத்தியின் ஓர் உயர் பண்பாகும். ஏனெனில் அதன் மூலம் நிகழவிருக்கும் ஒரு அழிவைத் தடுக்கமுடியும் என்பதனாலாகும். அத்துடன் அதன்மூலம் உண்மையான மோதல் தீர்வுக்கு வழிகாண வாய்ப்புண்டு. எவ்வாறாயினும் மோதலிலிருந்து தந்திரோபாயமாக விலகி விடுவதால் மட்டும் மோதலுக்கு ஏதுவான காரணிகளை ஒழித்துவிட முடியாது. எனவேதான் மோதல் தீர்வுச் செயலொழுங்கை நேர்மையாகச் செய்யவேண்டும். அதன்மூலம் மனித சமூகம் பல நன்மைகளை அடைந்து கொள்ளலாம்.

தென்னாபிரிக்கா வெற்றிகரமான மோதல் தீர்வுக்கு சிறந்த உதாரணமாகும். ஆயினும் பலஸ்தீனம், நேபாளம் ஆகிய நாடுகள் மோதல் தீர்வு காண்பதில் தொடர்ந்து தோல்வியையே கண்டு வருகின்றன.

1. எதிரியாய் இருப்பவர்கள் ஒன்றுசேர்வதன் மூலம் ஏற்படும் உறவு மூலம் புதிய பலம் ஏற்பட்டு மனித வள அபிவிருத்தி உறுதிப்படல்.
2. மோதல்களால் உருவாக்கப்பட்டிருந்த ஸ்திரமற்ற நிலை நீங்குவதனால் ஏற்படும் உற்காகமும் முயற்சியும் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்தல்.
3. உயிரழிவு, சொத்தழிவு முடிவுக்கு வரல்.
4. போராயுதங்களுக்காக செலவு செய்யப்பட்ட பெருந்தொகையான பணம் நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படல்.
5. இராணுவத்தின் எண்ணிக்கையை குறைத்து அவர்களை நாட்டில் அபிவிருத்திக்காக பயன்படுத்துதல்.
6. மோதல் காரணமாக நாட்டின் இயற்கை சுற்றாடலுக்கு ஏற்பட்ட தீங்கும் வளிமண்டலத்தின் மீதான பாதிப்பும் நீங்குதல்.
7. புனர் நிர்மாண வேலைத்திட்டங்களை நிரந்தர மீள் குடியேற்றத்திற்காக செலவழிக்க முடிதல். இடம் பெயர்ந்திருந்த மக்கள் நாட்டின் உற்பத்தியின் பங்குதாரர்களாக ஆக்கல்
8. சர்வதேச உறவு விருத்தியில் முதலீடு அதிகரித்தல்

9. வீழ்ச்சியடைந்துள்ள அபிவிருத்தி முயற்சிகளையும் கல்வி முறைகளையும் மேம்படுத்தி மனிதவள விருத்தியை ஏற்படுத்த முடியும்.

பொதுவாகப் பார்க்குமிடத்து சமாதான சமூகமொன்றில் நாடு அபிவிருத்தியடைந்து வேலை வாய்ப்புகள் அதிகரித்து உற்பத்தி பெருகி மக்கள் விரும்பும் வாழ்க்கைச் சூழல் முறை கட்டியெழுப்பப்படும். அது நாட்டை சமாதானச் சூழலுக்கு இட்டுச்செல்லும்.

**செயற்பாடு 5.9**

- மோதல் தீர்வின்மூலம் ஒரு நாட்டுக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றிய ஒரு அறிக்கையைத் தயார் செய்ய மாணவர்களை வழிப்படுத்தவும். மோதல் நடைபெற்ற நாடுகளில் இருந்து உதாரணங்களைக் கண்டறிய மாணவர்களை ஊக்குவிக்கவும்.